தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
| --- | --- | --- | --- | --- |
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
| --- | --- |
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

(எ - கா)

தாய்நாட்டின் மீது பற்றுக்கொள்வது <u>நாட்டுப்பற்று</u> .

( நாட்டுப்பற்று , அன்பு, வீரம் )

1. 15 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .
( பதினைந்து, பதின்ஐந்து, பதிணைந்து )

2. அதியர்மானின் தமிழ்ப்பற்றை எண்ணி மகிழ்ந்தவர் ________ .
( ஔவையார், கபிலர், திருவள்ளுவர் )

3. கடகம் ________________ செய்யப்படுகிறது.
( தாளினால், இரும்பினால், ஓலையினால் )

4. நீ தாயகத்திலிருந்து ________________ வந்தாய்?
( எது, என்ன, எப்பொழுது )

5. ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து ________________ இருக்கும்.
( நீழமாக, நீளமாக, நீலமாக)

6. பண்டாரவன்னியனின் நடுகல் நாட்டப்பட்ட இடம் ________ .
( உடையாவூர், கற்சிலைமடு, நல்லூர் )

7. பூ + கோலம் ________________ .

( பூக்கோலம், பூகோலம், பூம்கோலம் )

8. ______________________ ஒரு காப்பியம்.

( புறநானூறு, நாலடியார், மணிமேகலை )

9. தமிழீழத்தின் தேசிய மரம் ______________________ .

( வாகை, முல்லை, மல்லிகை )

10. தம்பிக்குத் தங்கை போல, சிறுவனுக்குச் ____________________ .

( தோழி, சிறுமி, நண்பி )

11. கலிலியோ ______________________ க் கண்டு பிடித்தார்.

( தொலைபேசியை, வானொலியை, தொலைநோக்கியை )

12. இசையோடு பாடி ஆடி நடிப்பதைக் ________________ என்பர்.

( நடனம், கூத்து, நாடகம் )

13. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ____________________

( சிவப்பு, வட்டம், நீலம் )

14. ______________________ தோகை விரித்து ஆடியது.

( மயில், சேவல், காகம் )

15. தரையில் செல்லும் உந்து ________________ .

( நீருந்து, விண்ணுந்து, பேருந்து )

16. சிறுவர்கள் பூங்காவில் பந்து ________________ விளையாடினர்.

( அடித்து, நடித்து, படித்து )

17. பாரிசு நகரிலுள்ள வெற்றிவளைவைக் கட்டியவர்

________________ .

( நியூட்டன், நெப்போலியன், எடிசன் )

18. கரும்பு ________________ .

( இனிக்கும், உறைக்கும், புளிக்கும் )

19. வேடன் ________________ க் கொல்லக் குறிபார்த்தான்.

( எறும்பை, புறாவை, காகத்தை )

20. நேற்று வெள்ளிக்கிழமை. இன்று ________________ .

( சனிக்கிழமை, திங்கட்கிழமை, புதன்கிழமை )

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| ஓடிஆடி | ~~கூட்டை~~ | எழுதி |
| காணப்பட்டன | செடிக்கு | ஒலி |

(எ - கா)

தூக்கணாங்குருவி புதுமையான கூட்டை க் கட்டும்.

1. இலைதளிர் காலத்தில் பறவைகளின் ________________ கேட்கும்.

2. கோவிலில் தோரணங்கள் ________________ .

3. தம்பி எந்நேரமும் ________________ விளையாடுவான்.

4. நான் நண்பிக்கு அஞ்சல் ________________ அனுப்பினேன்.

5. அப்பா ________________ த் தண்ணீர் ஊற்றினார்.

புள்ளிகள் 10

3) **மிகப்பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.**

(எ - கா)

கொக்குகள் மீன்களைக் கொத்தித் ____தின்றன____ .

1. கோடைகாலத்தில் மக்கள் சுற்றுலாச் ____________ .

2. அம்மா தங்கைக்கு உணவு ____________ .

3. நேற்று நான் ஓவியம் ____________ .

4. நாம் என்றும் உண்மை பேச ____________ .

5. கோழிக்குஞ்சு கீச்கீச் என்று ____________.

புள்ளிகள் 10

## 4) சொற்களை ஒழுங்குபடுத்திப் பொருத்தமாக எழுதுக.

(எ - கா)

நினைவாக / நாட்டினர் / நடுகல் / மாவீரர்களின்

<u>மாவீரர்களின் நினைவாக நடுகல் நாட்டினர்</u> .

1. வளர்த்தாள் / முயல் / வாணி / ஒரு

_______________________________________ .

2. இருக்கும் / இனிப்பாக / பலாப்பழம்

_______________________________________ .

3. அதியர்மான் / போற்றினான் / புலவர்களைப்

_______________________________________ .

4. பளுவான / தூக்கும் / யானை / பொருட்களைத்

_______________________________________ .

5. பிறந்தார் / ஆழிக்குமரன் / வல்வெட்டித்துறையில்

_______________________________________ .

புள்ளிகள் 10

5) **தரப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைக் கட்டங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| வௌ | வா | ல் | நா | இ |
| மே | ற் | கு | ய் | றா |
| இ | ள | நீ | ர் | ல் |
| ப | ம் | ப | ர | ம் |

(எ - கா)

தலைகீழாகத் தொங்கும் பறவை <u>வௌவால்</u> .

1. தென்னையிலிருந்து பெறப்படுவது ____________ .

2. நன்றி உள்ள விலங்கு ____________ .

3. விளையாட்டுப் பொருட்களில் ஒன்று ____________ .

4. கடலில் வாழும் உயிரி ____________ .

5. கதிரவன் மறையும் திக்கு ____________ .

புள்ளிகள் 05

## 6) மிகப்பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| தொடங்கியது | நண்பகல் | ~~படிக்கிறான்~~ |
| மகிழ்ச்சியுடன் | பள்ளியில் | முதலாம் |

(எ - கா)

ஆதிரையன் மூன்றாம் வகுப்புப் __படிக்கிறான்__. அவனது ____________ விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. விளையாட்டுப் போட்டி ____________ ஒரு மணிக்குத் ____________. ஓட்டப் போட்டி, குண்டு எறிதல், உயரம் பாய்தல் எனப் பல விளையாட்டுகள் இடம்பெற்றன. ஆதிரையன் ஓட்டப் போட்டியில் ____________ இடத்தைப் பெற்றான். அதனால், அவனுக்கு ஒரு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. அவன் ____________ வீட்டுக்குச் சென்றான்.

புள்ளிகள் 10

7) **ஒரு சொல்லில் விடை எழுதுக.**

(எ - கா)

நுண்ணுயிரிகள் எவற்றை உருவாக்கும்?

நோய்களை

1. வில்லவராய முதலியார் எங்கே வாழ்ந்தார்?

2. எது புறாவைக் காப்பாற்றியது?

3. அடங்காப்பற்று என அழைக்கப்பட்ட இடம் எது?

4. அறநூல் ஒன்றின் பெயரைத் தருக.

5. அதியர்மான் ஔவையாருக்குக் கொடுத்த கனியின் பெயர் என்ன?

புள்ளிகள் 10

**8) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

கார்த்திகைப் பூ மிகவும் அழகானது. இது கொடியில் பூக்கும் பூவாகும். கார்த்திகைப் பூ சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களை உடையது. இப்பூவின் இயற்பெயர் காந்தள். இப்பூ கார்த்திகை மாதத்தில் பூக்கும். இதனால், இது கார்த்திகைப் பூ என அழைக்கப்படுகிறது. எம் மாவீரர் வழிபாட்டில் கார்த்திகைப் பூ முதலிடம் பெறுகிறது. கார்த்திகைப் பூ தமிழீழத்தின் தேசிய மலர் ஆகும்.

(எ - கா)

கொடியில் பூக்கும் பூ எது?

<u>கொடியில் பூக்கும் பூ கார்த்திகைப் பூ</u>____________________ .

1. கார்த்திகைப் பூ எந்நிறங்களை உடையது?

   ________________________________________ .

2. இப்பூவின் இயற்பெயர் என்ன?

   ________________________________________ .

3. கார்த்திகைப் பூ எந்த மாதத்தில் பூக்கும்?

   ________________________________________ .

4. யாருடைய வழிபாட்டில் கார்த்திகைப் பூ முதலிடம் பெறுகிறது?

   ________________________________________ .

5. தமிழீழத்தின் தேசிய மலர் எது?

   ________________________________________ .

புள்ளிகள் 10

9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15

TEDC